# வருடாந்த அறிக்கை-2019

## இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

## மார்ச் 2020

# தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு, இலங்கை.

# வருடாந்த அறிக்கை-2019

**அலுவலகம்:**

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

அறை இல. 203-204, தொகுதி -2

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம்

கொழும்பு-07

இலங்கை

தொலைபேசி:+94 011 2691625

தொலைநகல்:+94 11 2691625

மின்னஞ்சல்:rti.commission16@gmail.com

# உள்ளடக்கம்

*நோக்கு, பணிநோக்கு மற்றும் இலக்குகள்*

*தலைவரின் முகவுரை*

1. பிரஜைகளின் தகவல் அணுகுவதற்கான உரிமை

2. ஆணைக்குழுவின் செயற்பாடுகள், கடமைகள் மற்றும் அதிகாரங்கள்

3. ஆணைக்குழுவின் செயலாக்கங்கள்

    3.1. மேன்முறையீட்டின் பெறுகை

    3.2. ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு விசாரணை

    3.3. மேன்முறையீட்டு வகைகள்

    3.4. பகிரங்க சபைகளின் இணக்க முறைமை

    3.5. பகிரங்க சபைகளின் அறிக்கை

    3.6. பொதுமக்களுக்கு விழிப்புணர்வுத் நிகழ்வுகள்

4. நிர்வாக, நிதி செயலாக்க முறைகள்

# தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

## நோக்கு

தகவலறியும் உரிமையை இலங்கை பிரஜைகள் வினைதிறனான முறையில் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வது.

## பணிநோக்கு

வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சிக்கு இணைந்ததாக அனைத்து அரச அதிகாரிகளினதும் செயற்பாடுகளை கண்காணித்தல் மற்றும் செயல்விளைவுடன் நீதியின் முன்கொண்டு செல்லுதல் ஊடாகவும், பிரசைகள் தமக்கு தேவையான தகவல்களை அறிந்துகொள்ளக்கூடிய சூழலை உருவாக்குவதன் மூலம் இலங்கை பிரசைகள் அனைவருக்கும் தகவல் அறியும் உரிமையை உறுதி செய்தல்.

## இலக்குகள்

- <u>வேண்டுகோள்களை செயன்முறைப்படுத்துவதற்கு இயலச் செய்யும் ஏற்பாடுகளை ஊக்குவித்தல்:</u> மேன்முறையீடுகள் தொடர்பாக ஒழுங்குகளை உருவாக்குதல், விசாரணைச் செயன்முறைகள், தகவல் வழங்குவதற்கான கட்டண அட்டவணை மற்றும் அறிக்கை வடிவொழுங்குகள், தகவலறியும் உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு விளைவு கொடுக்கும் நோக்கத்திற்காக பணிப்புரைகளையும் வழிகாட்டுதல்களையும் பிரசுரித்தல், ஊடக அமைச்சால் முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான மதியுரை, ஆணைக்குழுவின் மேலோட்டப்பார்வை மற்றும் தீர்ப்பு வழங்கல் வகிபங்கை பகிரங்கப்படுத்தல்.

- <u>செயல்விளைவுடைய தீர்ப்பு வழங்கல் மற்றும் அமுல்படுத்தல்:</u> அரசாங்க அதிகாரிகளுக்கும் தகவல் கோருவோருக்கும் இடையிலான பிணக்குகளில் வினைத்திறனுடன் தீர்ப்பு வழங்கல்.

- <u>அரச உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல்</u>: அரச உத்தியோகத்தர்களின் பயிற்சியில் கூட்டுழைப்பு, மற்றும் பங்காண்மையாளர்களுக்கான தகவல் அறியும் உரிமை மீதான விசேடித்த பயிற்சிகளில் ஆதரவளித்தல்.

- <u>பொது விழிப்புணர்வை அதிகரித்தல்:</u> ஆணைக்குழுவின் இணையத்தளம் மற்றும் ஏனைய ஊடகங்கள் ஊடாக தகவலறியும் உரிமைசட்டத்தினை குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல்.

- <u>ஆவண முகாமைத்துவத்தை முன்னேற்றுதல்:</u> வழிகாட்டுதல்களின் வழியாக தகவல்கள் முகாமைத்துவம் மீதான நுணுக்கமான பணிப்புக்களை வழங்குதல்

- <u>துடிப்பான செயற்பாட்டு வெளிப்படுத்துகையை அதிகரித்தல்:</u> வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் தகவல் வெளிப்படுத்துகையின் துடிப்பான செயற்பாட்டை வளர்த்துக்கொள்ளல், குறைந்தபட்ச நியமங்களை விதித்தல், தற்போதைய சட்டங்களுக்கு மீளமைப்புக்களையும் காலத்திற்கேற்ப மதிப்பீட்டு அறிக்கைகளைவும் வழங்கல்

- <u>செயல்விளைவுடைய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையை நிறுவுதல்</u>: பொருத்தமான இணையவழி தீர்வுகள் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகளை பயன்படுத்துவதன் ஊடாக அரச அதிகாரிகள் தகவலறியும் உரிமையை அமுல்படுத்துவதன் செயல்விளைவை கண்காணித்தலும் மதிப்பீட்டை மேற்கொள்ளலும்.

# ஆணைக்குழுவின் தலைவரின் முகவுரை

இந்த அறிக்கை 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் நடைமுறைகளையும் சாதனைகளையும் சுருக்கமாக முன்வைக்கிறது. இது முதலாவதாக ஆணைக்குழுவின் முக்கிய செயல்பாட்டை உள்ளடக்கிறது. உதாரணமாக தகவல் அலுவலகர் அல்லது குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் என்போரின் முடிவுகளுக்கு எதிராக தகவல் கோரிக்கையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் தீர்ப்புகள் என்பவற்றினை எடுத்து காட்டுகின்றது. அத்துடன் மேலதீகமாக தகவல் அறியும் உரிமை பற்றிய பொதுமக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்குவதிலும், பொது அதிகாரிகளின் இணக்கம் மற்றும் அறிக்கையிடல் போன்றவற்றையும் ஆணைக்குழுவின் சாதனைகளையும் தெளிவாக எடுத்தியம்புகின்றது.

இந்த ஆண்டில், தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவானது குடிமக்களிடமிருந்து 1089 மேன்முறையீடுகளைப் பெற்றது, அவற்றில் 709 (அல்லது 65.1 சதவீதம்) மேன்முறையீடுகள் முடிவுறுத்தப்பட்டன. மேன்முறையீட்டில் 65 சதவிகிதமான மேன்முறையீட்டினை முடிவுக்குக் கொண்டுவருவது ஒரு மேன்முறையீட்டு அமைப்புக்கு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும், இது ஊழியர்களின் பற்றாக்குறையால், குறிப்பாக திறமையான சட்டப் பணியாளர்கள் இன்மையினால் பெரிதும் தடைப்பட்டதாக காணப்பட்டது. UNDP மற்றும் SDGAP-USAID உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட சட்ட ஆலோசகர்கள் மற்றும் சட்ட ஆய்வாளர்களின் உதவியுடன் இந்த சவால்களை ஆணைக்குழுவினால் சமாளிக்க முடிந்தது. UNDP, SDGAP-USAID மற்றும் அனைத்து ஆலோசகர்களுக்கும் அவர்களின் சிறந்த பங்களிப்புகளுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

சுவிட்சர்லாந்து தூதரகம் வழங்கிய நிதி உதவியைப் பயன்படுத்தி, தொலைதூர மாவட்டங்களான பனாமா (அம்பாரை), அம்பகமுவா (நுவரெலியா), கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கருவலஸ்வேவா (புத்தளம்) ,சூரியவேவா (ஹம்பாந்தோட்டா) மற்றும் மஹியங்கனை (பதுளை) முதலிய 7 மாகாணங்களில் ஆலோசனை மற்றும் மேன்முறையீட்டு அமர்வுகளினை சிவில் சமூக தலைவர்கள், CBO மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் திட்டத்தை ஆணைக்குழு நடத்தியது.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆணைகளில் தெரிவு செய்யப்பட்ட சில ஆணைகள் மற்றும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பற்றிய விளக்க உரைகளும் சட்டத்தை பயன்படுத்தும் முறைகளையும் உள்ளடக்கிய இரண்டு வெளியீடுகள் சிறந்த சட்ட அறிஞர்கள், பதிப்பாசிரியர், அரசு ஊழியர்கள் மற்றும் கொள்கை வல்லுநர்களின் பங்களிப்புகளுடன், ஆணைக்குழுவின் ஆணையாளர் கிஷாலி பின்ரோ ஜயவர்தன ஆகியோரால் பதிப்பிக்கப்பட்டு சுவிட்சர்லாந்து தூதரகத்தின் உதவியினால் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு சுவிட்சர்லாந்து தூதரகம் வழங்கிய உதவியை ஆணைக்குழு மதிப்புடன் அங்கீகரிக்கின்றது.

செப்டம்பர் 20, 2019 அன்று UNDP உதவி கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு திட்டத்தின் கீழ் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கான

தலைமைச் செயலாளர்களுக்கான அனைத்து செயலாளர்களுக்கும் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது மேலும் செயற்திட்டத்தை எமக்காக மேற்கொண்டது.. மேன்முறையீட்டு விசாரணை செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு SDGAP ஒரு இணைய அடிப்படையிலான மின்னணு மேற்பார்வை முறையை நிறுவுவதில் ஒரு செயற்திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் அயராத முயற்சிகளுக்கும், நீண்ட நேரம் விசாரணை மற்றும் மேன்முறையீடுகளை மேற்கொண்டு அவற்றினை முடிவுறுத்தியமைக்கும் நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்துகிறேன். பொது விழிப்புணர்வு திட்டங்களுக்கும் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஊழியர்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இலக்குகளை அடைவதற்கு ஒத்துழைத்தமைக்காக பணிப்பாளர் நாயகம் மற்றும் அனைத்து ஊழியர்களின் உறுப்பினர்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

மகிந்த கம்மன்பில

ஆணைக்குழுவின் தலைவர்

# 1. பிரஜைகளின் தகவலை அணுகுவதற்கான உரிமை

## 1:1 தகவலறியும் உரிமை- ஓர் அடிப்படை உரிமை

2015ம் ஆண்டு ஏற்கப்பட்ட 19ம் திருத்தத்தின் ஊடாக இலங்கையின் அரசியலமைப்பினால் அடிப்படை உரிமையாக பிரஜைகளின் தகவலை அணுகுவதற்கான உரிமை பாதுகாக்கப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 14 A (1) இன் அடிப்படையில் ஒவ்வொரு பிரஜையும், பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதும் பின்வருபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான ஏதேனும் தகவலை, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாராக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் (அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்க திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு (ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு (இ) ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை, இப்பந்தியின் அ ஆ அல்லது இ என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள்

உப பிரிவு 2ன் அடிப்படையில் ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்காக, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளை பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைத் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையை தடுப்பதற்காக அல்லது பேணுவதற்காக மற்றும் தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன்கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் சட்டத்தினால் விதந்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிரந்த மட்டுப்பாடுகள் எதுவும் இவ்வுறுப்புரையினால் பிரகடனம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமை மீது இடப்படுதல் ஆகாது.

## 1:2 2016ம் ஆண்டின் தகவலுக்கான உரிமைச் சட்டம்

2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஸ்தாபிக்கபட்ட 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டமானது தகவலினை அணுகுவதற்கான உரிமையினை வழங்குதல்: அத்தகைய அணுகுதலானது குறித்த அடிப்படைகளின் மூலம் மறுக்கப்படுதல்: தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினை ஸ்தாபித்தல்: தகவல் அலுவர்களை நியமித்தல்: தற்செயலானது அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட நடைமுறை மற்றும் வடிவங்களை அமைப்பது போன்ற விடயங்களினை உள்ளடக்கியுள்ளது.

## 1.3 தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

இந்த சட்டத்தின் 11வது பிரிவின் விதிகளின்படி தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவானது, 2016 ஒக்டோபர் மாதம் 01ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. சட்டத்தின் விதிகளின்படி தொடர் நடவடிக்கையினையும் பொது சின்னத்தையும் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட மன்றமாக இவ்வாணைக்குழு விளங்குகின்றது. தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவானது, குறித்த சட்டத்தினை செயல்படுத்தும் மற்றும் அமுல்படுத்தும் மத்திய அதிகாரசபையாக தொழிற்படுகின்றது. இலங்கை வாழ் மக்களினால் தகவல்களை அறியும் பொருட்டு செய்யப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரணைசெய்து முடிவு எடுத்தல், தகவல் உரிமை செயற்பாட்டுக்கு உரிய விதிகள், ஆலோசனைகள், நியமங்கள் என்பவற்றை வெளியிடுதல், சட்டத்தின் பிரிவு 38ன் கீழ் ஒழுங்குகளை மீறுகின்ற நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள பரிந்துரை செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரமும் இவ் ஆணைக்குழுவிற்கு உண்டு. இச்சட்டமானது 03.02.2017ம் ஆண்டிலிருந்து அமைச்சரினால் எல்லா பகிரங்க அதிகார சபைகளின் மீதும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவானது, அரசியலமைப்பு சட்டசபையின் பரிந்துரையின்படி ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் தலைவர் ஒருவரையும் அங்கத்தவர்கள் சிலரையும் உள்ளடக்கியுள்ளது. இந்த நியமனங்களுக்கான பரிந்துரையினை சட்டசபை சமர்ப்பிக்கும்போது, இலங்கை வழக்குரைஞர்கள் சங்கம், வெளியீட்டாளர்கள, ஆசிரியர்கள், பத்திரிகையாளர் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகளால் பரிந்துரைசெய்யப்பட்ட யாராயினும் நபர்களை தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்யப்படுவோர் சட்டம், ஆட்சி, அரசமுகாமைத்துவம், சமூக சேவை, பத்திரிகை துறை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது முகாமைத்துவ பிரிவில் செயற்திறன்மிக்க அறிவும் அனுபவமும் திறமையும் கொண்ட, பொது சமூக வாழ்வில் சிறப்பான நபர்களாக இருப்பதுடன் எந்த அரசியல் கட்சிகளுடனும் தொடர்புராத, அரச நீதித்துறை அல்லது வேறு எந்த பதவிகளையும் வகிக்காத, தொழில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடாத நபர்களாக இருத்தல் வேண்டும்.

## 1:4 ஒழுங்கு விதிகள், விதிகள் மற்றும் வழிகாட்டிகள்

2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் 2004/66 ம் இலக்க அசாதாரண வர்த்தமானி அறிவித்தல் மூலம் 03.02.2017 அன்று அமைச்சினால் சட்டத்தின் நடைமுறை செயற்பாடு தொடர்பில் பிரசுரிக்கப்பட்டது.

இவ்விதிமுறைகளில் தகவலை அணுகுவது தொடர்பான நடைமுறை பரிந்துரைகளை செய்வது: செயற்திறன் மிக்க வெளிப்பாடு: கோரிக்கை வடிவங்கள்: குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் மற்றும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் நடவடிமுறை என்பன இவற்றுள் அடங்கும்.17 பெப்ரவரி 2019ம் ஆண்டு அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 2006/43 மூலம் இவ் விதிகள் திருத்தப்பட்டன. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 8ன் கீழ் அமைச்சுகள் இரண்டு ஆண்டறிக்கையினை பிரசுரிக்க தேவைப்படுத்தப்படுகின்ற போது தகவலுக்கான உரிமைச் சட்டதின் பிரிவு 10 ன் கீழ் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு ஆண்டறிக்கையினை அனுப்ப

தேவைப்படுத்தப்படுகின்றது. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவானது பகிரங்க அதிகார சபைகள் மற்றும் அமைச்சுகள் ஆண்டறிக்கை மற்றும் இரண்டு ஆண்டறிக்கைகளினை தயாரிப்பதற்காக ஒழுங்குவிதிகளை உருவாக்கியுள்ளது. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவானது தகவலறியும் உரிமைக்கான ஒழுங்கு விதிகளின் வரைபினை ஆக்குவதற்கு முகவர்களுடன் ஒத்துழைத்து செயற்திறன் மிக்க வெளிப்பாட்டின் மீது பகிரங்க அதிகார சபைகளுக்கான வழிகாட்டி நெறிகளினை இறுதிப்படுத்தியிருந்தது. அத்துடன் பிரிவு 10ன் ஆண்டறிக்கைகளுக்கான வடிவங்களினை உருவாக்கியிருந்தது.

## 1.5. மூலோபாய அமுலாக்க திட்டம் 2017-2019

UNDPன் உதவியுடன் 8 நோக்கங்களின் கீழ் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவானது 3 ஆண்டிற்கான 2017-2019 வரையான மூலோபாய அமுலாக்க திட்டத்தினை தாயரித்துள்ளது. மூலோபாய அமுலாக்க திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் ஆண்டு செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

## 1.6 தற்போதைய ஆணைக்குழு

தலைவர்-

திரு. தொன் மகிந்த கம்மன்பில அவர்கள் ஓய்வு பெற்ற தரம்-1,(சிறப்பு தரம்) இலங்கை நிர்வாக சேவை அலுவலர், முன்னாள் அமைச்சின் செயலாளர்

<u>ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்</u>-

(i).செல்வி. கிஷாலி பின்டோ ஜயவர்தன, சிரேஷ்ட சட்டத்தரணி

(ii).திரு.எஸ்.ஜி.புஞ்சிஹேவா சிரேஷ்ட சட்டத்தரணி

(iii). நீதிபதி ரோஹினி வல்கம

(iv). கலாநிதி. செல்வி திருச்சந்திரன் -சிரேஷ்ட ஆய்வாளர்

# 2. ஆணைக்குழுவின் செயற்பாடுகள்,கடமைகள் மற்றும் அதிகாரங்கள்

## 2.1 ஆணைக்குழுவின் செயற்பாடுகளும்,கடமைகளும்

I. 2016 ஆம் 12வது தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகார சபைகளுக்கு நியமிக்கப்பட்ட செயற்பாடுகள் சரியாக நடைபெறுகின்றதா என மேற்பார்வை செய்தலும் அதற்கேற்ப செயற்படுகின்றனரா என உறுதிபடுத்தலும்.

II. சீர்த்திருத்தம் செய்வதற்கும் மதிப்பாய்வு செய்வதற்கும் அவசியமான பொது பரிந்துரைகளையும் ஏதாவதொரு பகிரங்க சபைக்கு முக்கியமாக தேவைப்படும் பரிந்துரைகளையும் ஏற்பாடு செய்தல்.

III. சட்டத்தின்படி தகவல்களை விடுவிப்பதற்காக பகிரங்க அதிகாரசபையினால் சேகரிக்கப்படும் கட்டணத்தை நிர்ணயித்தல் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.

IV. தகவல் அலுவலர் ஒருவரினால் இலவசமாக தகவல்களை பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பங்களை தோற்றுவித்தல்.

V. முற்போக்கு வெளிப்பாட்டு கொள்கை அடிப்படையில் தகவல்களை வழங்குதல் தொடர்பிலான கட்டண அட்டவணையை நியமித்தல்.

VI. அரச ஊழியர்களுடன் ஒருமித்து செயற்படுதல் அல்லது அவர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை பொறுப்பேற்பதன் மூலம் சட்டத்தின் ஒழுங்குகளை பயனுள்ள விதத்தில் செயல்படுத்துதல்.

VII. இச்சட்டத்தின் தேவையினையும் அதன் படி நபர்களின் உரிமைகளையும் வெளிக்கொணர்டுவருதல்.

VIII. பகிரங்க சபைகள் தமது அறிக்கைகளை சரியாக பராமரித்தல் தொடர்பான வழிக்காட்டல்களை வழங்குதல்.

## 2.2 ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் கடமைகளின் விபரங்கள்

I. வெளிப்படுத்தலின்போது கசிந்துள்ள ஏதாவது தகவல்களுக்கு அணுகுதலால் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக கேட்கப்படும் தகவல் ஆலோசனைகளை அலுவலர்களுக்கு வழங்குதல். (சட்டத்தின் 5(5)ம் பிரிவு)

II. பகிரங்க அதிகாரிகள் தமது பதிவுகளை நடாத்தி செல்லும் பொறுப்பினை நடைமுறைப்படுத்துவதற்கான நியமங்களை வெளியிடல். (சட்டத்தின் 7(2)ம் பிரிவு)

III. அமைச்சர்களால் வெளியிடப்படவேண்டிய வருடாந்த அறிக்கை பற்றிய வடிவமைப்பை தீர்மானித்தல். (சட்டத்தின் 5(5)ம் பிரிவு)

IV. குறிப்பிட்ட திட்டங்கள் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதுடன், அத்திட்டங்களால் பாதிப்பை எதிர்கொள்ளும்

நபர்களுடனான முற்போக்கு முறையிலான தொடர்பு குறித்து அமைச்சர்கள் பின்பற்றவேண்டிய வழிக்காட்டல்களை வழங்குதல்.(சட்டத்தின் 9(1)ம் பிரிவு)

V. எல்லா பகிரங்க சபைகளும் வருடந்தோறும் ஆணைக்குழுவிற்கு அனுப்பவேண்டியதும், அவர்களின் அலுவலகங்களில் மற்றும் இணையத்தளத்தில் காட்சிபடுத்த வேண்டியதுமான வருடாந்த அறிக்கைகளின் வடிவமைப்பை விதிகள் மூலம் குறிப்பிடுதல். (சட்டத்தின் 10ம்,42ம் 1(ஏ)பிரிவு)

VI. ஆணைக்குழுவிற்கு தேவையான ஊழியர்களை நியமித்தல். (சட்டத்தின் 13 பிரிவு)

VII. ஆணைக்குழுவின் நிதியினையும் அதற்கான கணக்குகளையும் பராமரித்தல்.

VIII. சட்டத்தின் 32 வது பிரிவின்படி, மேன்முறையீட்டினை பிரேரித்தல் தொடர்பான நடவடிக்கையை வெளியிடுதல் ˙(சட்டத்தின் 22 ம் பிரிவு).

IX. தகவல்கள் வெளிப்படுத்துகையானது மூன்றாம் தரப்பினரால் பகிரங்க சபை ஒன்றுக்கு செய்யப்படும்போது தனிப்பட்ட இணைப்பினைவிட முக்கியமான சந்தர்ப்பங்களில் அத்தகவல்களை வெளிப்படுத்தும்படி பகிரங்க சபைக்கு கட்டளை பிறப்பித்தல். (சட்டத்தின் 22(2)(ஏ) பிரிவு)

X. தகவல் அலுவலர் அல்லது குறித்தளிக்கப்பட்ட அலுவலர்களால் செய்யப்படும் தவறுகள் தொடர்பாக குற்றவியல் வழக்கினை தொடருதல்.

## 2.3.ஆணைக்குழுவின் அதிகாரங்கள்

I. விசாரணைகளை நடாத்துதலும் அவ்விசாரணைகளுக்கு சமூகளிக்கும்படி குறிப்பிட்ட நபருக்கு கட்டளை விடுத்தலும்.

II. குறிப்பிட்ட நபரை விசாரணை செய்தலும்,அவர் வசம் உள்ள தகவல்களை வெளியிடும் படி அவருக்கு ஆணையிடுதலும்.

III. பகிரங்க சபையின் வசம் உள்ள தகவல்களை பரீட்சித்தல்.

IV. ஏதாவதொரு குறிப்பிட்ட வடிவமைப்பின்படி தகவல்களை வழங்கும்படி பகிரங்க சபைக்கு ஆணையிடுதல்.

V. ஏதாவதொரு பகிரங்க சபையின் வசம் தக்கவைக்கப்பட்டுள்ள தகவல்களை வெளிப்படுத்தும் படி ஆணையிடுதல்.

VI. 32வது பிரிவின்படி, அதிருப்திக்கு உள்ளான ஓர் நபரினால் ஆணைக்குழுவிடம் முறையிடப்படும் மேன்முறையீட்டினை பரிசீலனை செய்தலும் தீர்மானம் எடுத்தலும்.

VII. சரியான நேரத்திற்கு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட கட்டணங்களை திருப்பி கொடுக்கும்படி ஆணையிடுதல்.

VIII. சட்டத்தின் 41 வது பிரிவின்படி, வெகுசன ஊடக அமைச்சரினால் வழங்கப்படும் உத்தரவுகளுக்கான பரிந்துரைகளை செய்தல்.

IX. சட்டத்தின் 42 வது பிரிவின்படி, விதிகளை செயல்படுத்துதல்

# 3.ஆணைக்குழுவின் செயலாக்கங்கள்

## 3.1 மேன்முறையீட்டின் பெறுகை

முன்னைய ஆண்டில் பெறப்பட்ட 800 மேன்முறையீடுகளுடன் ஒப்பிடும் போது, ஆணைக்குழு மதிப்பாய்வு செய்யப்பட்ட இவ் ஆண்டில் 1089 முறையான மேன்முறையீடுகளினை பெற்றது. அட்டவணை-1 ஆண்டின் மாத ரீதியிலாக பெறப்பட்ட மேன்முறையீட்டு எண்ணிக்கையினை காட்டுகின்றது.

**அட்டவணை - 01** 2018 மற்றும் 2019ல் பெற்றுக்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள்

| மாதம் | 2018 ஆண்டு | 2019 ஆண்டு |
|---|---|---|
| தை | 60 | 114 |
| மாசி | 67 | 96 |
| பங்குனி | 69 | 84 |
| சித்திரை | 76 | 95 |
| வைகாசி | 72 | 55 |
| ஆணி | 41 | 74 |
| ஆடி | 78 | 106 |
| ஆவணி | 91 | 92 |
| புரட்டாதி | 95 | 102 |
| ஐப்பசி | 73 | 84 |
| கார்த்திகை | 61 | 103 |
| மார்கழி | 30 | 84 |
| மொத்தம் | 800 | 1089 |

**அட்டவணை 2** ஆனது 2018ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019ம் ஆண்டில் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டு எண்ணிக்கையை காட்டுகின்றது. மத்திய மற்றும் வடமத்திய மாகாணத்திலிருந்து பெறப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை குறைவானதாக காணப்படுகின்றது.

அட்டவணை-02 2019ல் மாகாணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ மேன்முறையீடுகளின் எண்ணிக்கை

| மாகாணங்கள் | 2018 பெறப்பட்ட மேன்முறையீடு | 2019 பெறப்பட்ட மேன்முறையீடு | % மாற்றம் |
|---|---|---|---|
| மேல் மாகாணம் | 338 | 443 | 31.1 |
| தென் மாகாணம் | 143 | 188 | 31.5 |
| வட மாகாணம் | 48 | 69 | 43.8 |
| மத்திய மாகாணம் | 77 | 74 | -3.9 |
| சபரகமுவ மாகாணம் | 35 | 64 | 82.9 |
| வடமத்திய மாகாணம் | 43 | 30 | -30.2 |
| கிழக்கு மாகாணம் | 75 | 113 | 50.7 |
| ஊவா மாகாணம் | 15 | 31 | 106.7 |
| வடமேல் மாகாணம் | 26 | 77 | 196.2 |
| | 800 | 1089 | 36.1 |

**அட்டவணை 3** ஆனது ஆணைக்குழுவினால் 2019ம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகளின் மாகாண விகிதாசார பங்குகள் 2018ம் ஆண்டுடன் ஒப்பிட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேல் மகாணத்திலிருந்து அதிகளவிலான மேன்முறையீடுகள் பெறப்பட்ட அதேவேளை வடமத்திய மகாணத்திலிருந்து குறைவான மேன்முறையீடுகள் பெறப்பட்டுள்ளது.

அட்டவணை-03 2018 மற்றும் 2019ம் ஆண்டு மாகாணங்களினால் பெறப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கையும் மற்றும் பங்கு சதவீதமும்

| மாகாணங்கள் | 2017ம் ஆண்டு இடம்பெற்ற மேன்முறையீடு | மாகாண சதவீத பங்கு | 2018ம் ஆண்டு இடம்பெற்ற மேன்முறையீடு | மாகாண சதவீத பங்கு |
|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 338 | 42.3 | 443 | 40.7 |
| தென் மாகாணம் | 143 | 17.8 | 188 | 17.3 |
| வட மாகாணம் | 48 | 6.1 | 69 | 6.3 |
| மத்திய மாகாணம் | 77 | 9.7 | 74 | 6.8 |
| சபரகமுவ மாகாணம் | 35 | 4.4 | 64 | 5.9 |
| வடமத்திய மாகாணம் | 43 | 5.3 | 30 | 2.8 |
| கிழக்கு மாகாணம | 75 | 9.3 | 113 | 10.4 |
| ஊவா மாகாணம | 15 | 2.0 | 31 | 2.8 |
| வடமேல் மாகாணம் | 26 | 3.2 | 77 | 7.1 |
| மொத்தம் | 800 | 100 | 1089 | 100.0 |

**அட்டவணை-4** மாவட்டங்களிடமிருந்து பெறப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கையும் அதன் பங்கு சதவீதம்

| மாவட்டம் | 2018 | பங்கு % | 2019 | பங்கு % |
|---|---|---|---|---|
| கொழும்பு | 213 | 26.5 | 323 | 29.7 |
| கம்பஹா | 91 | 11.3 | 73 | 6.7 |
| களுத்துறை | 35 | 4.4 | 47 | 4.3 |
| காலி | 90 | 11.2 | 113 | 10.4 |
| மாத்தறை | 21 | 2.6 | 44 | 4.0 |
| ஹம்பாந்தோட்டை | 32 | 4.0 | 31 | 2.8 |
| கண்டி | 63 | 7.8 | 49 | 4.5 |
| மாத்தளை | 13 | 1.6 | 12 | 1.1 |
| நுவரெலியா | 2 | 0.2 | 13 | 1.2 |
| திருகோணமலை | 6 | 0.7 | 12 | 1.1 |
| மட்டக்களப்பு | 7 | 0.9 | 25 | 2.3 |
| அம்பாறை | 61 | 7.7 | 76 | 7.0 |
| யாழ்ப்பாணம் | 26 | 3.4 | 49 | 4.5 |
| வவுனியா | 15 | 1.9 | 10 | 0.9 |
| மன்னார் | 5 | 0.6 | 2 | 0.2 |
| கிளிநொச்சி | 1 | 0.1 | 5 | 0.5 |
| முல்லைதீவு | 1 | 0.1 | 3 | 0.3 |
| குருணாகல் | 189 | 2.4 | 54 | 5.0 |
| புத்தளம் | 7 | 0.9 | 23 | 2.1 |
| இரத்தினபுரி | 29 | 3.6 | 44 | 4.0 |
| கேகாலை | 6 | 0.7 | 20 | 1.8 |
| அனுராதபுரம் | 35 | 4.5 | 14 | 1.3 |
| பொலநறுவை | 7 | 0.9 | 16 | 1.5 |
| பதுளை | 6 | 0.7 | 19 | 1.7 |
| மொனராகலை | 10 | 1.2 | 12 | 1.1 |
| மொத்தம் | 800 | 100 | 1089 | 100.0 |

**அட்டவணை 5** ஆனது 2019ம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகைப்பட்ட பகிரங்க அதிகார சபைகளினால் ஆணைக்குழுவிற்கு பெறப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 2018ம் ஆண்டுடன் ஒப்பிட்டு காட்சிப்படுத்துகின்றது.

அட்டவணை-5 2017-2019 வரை பல்வகைப்பட்ட பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து பெறப்பட்ட மேன்முறையீடுகள்

| பகிரங்க அதிகார சபையின் வகை | 2017 | % | 2018 | % | 2019 | % |
|---|---|---|---|---|---|---|
| ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்றம், அமைச்சரவை | 5 | 2.2 | 9 | 1.1 | 25 | 2.3 |
| நீதிமன்றம்/ நியாயசபைகள் | 0 | 0.0 | 8 | 1.0 | 7 | 0.6 |
| ஆணைக்குழு | 16 | 7.0 | 61 | 7.6 | 66 | 6.1 |
| அமைச்சுகள் | 28 | 12.2 | 112 | 14.0 | 170 | 15.6 |
| மாகாண சபைகள் | 16 | 7.0 | 41 | 5.1 | 32 | 2.9 |
| மாவட்ட செயலகங்கள் | 22 | 9.6 | 76 | 9.5 | 106 | 9.7 |
| உள்ளூர் அதிகாரசபைகள் | 26 | 11.3 | 60 | 7.5 | 104 | 9.6 |
| திணைக்களங்கள் | 67 | 29.1 | 223 | 27.9 | 291 | 26.7 |
| நியதிச்சட்ட சபைகள் | 34 | 14.8 | 134 | 16.8 | 201 | 18.5 |
| பல்கலைக்கழகங்கள், உயர் கல்வியல் ஸ்தாபனங்கள் | 0 | 0.0 | 31 | 3.9 | 25 | 2.2 |
| வங்கிகள் | 16 | 7.0 | 28 | 3.5 | 24 | 2.2 |
| கம்பனிகள் | 0 | 0.0 | 14 | 1.8 | 21 | 1.9 |
| கூட்டுத்தாபனங்கள் | 0 | 0.0 | 3 | 0.4 | 12 | 1.1 |
| சமூகங்கள் | 0 | 0.0 | 0 | 0.0 | 5 | 0.5 |
| மொத்தம் | 230 | 100 | 800 | 100 | 1089 | 100 |

**அட்டவணை 6** ஆனது 2019ம் ஆண்டின் போது மொழிரீதியிலாக பெறப்பட்ட மேன்முறையீட்டு எண்ணிக்கையினை காட்டுகின்றது.

அட்டவணை-6 2017-2019 வரை மொழிரீதியாக பெறப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பங்கு சதவீதத்தினை காட்டுகின்றது.

| மொழி | 2017 | % | 2018 | % | 2019 | % |
|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | 154 | 67.0 | 532 | 66.5 | 758 | 69.6 |
| தமிழ் | 23 | 10.0 | 104 | 13.0 | 156 | 14.3 |
| ஆங்கிலம் | 52 | 22.6 | 164 | 20.5 | 175 | 16.1 |
| | 230 | 100.0 | 800 | 100.0 | 1089 | 100.0 |

## 3.2. மேன்முறையீட்டு விசாரணை

ஆணைக்குழுவின் சபை கூட்டங்கள்

ஒவ்வொரு வாரத்தின் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறும்.

பிரஜைகளின் தகவலுக்கான உரிமையினை அணுகும் நடைமுறையானது 20 ஜனவரி 2017 2002/42ம் இலக்க அசாதாரண வர்த்தமானி மூலம் 03 பெப்ரவரி 2017ம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் வெகுசன ஊடக அமைச்சின் கண்காணிப்பின் அடிப்படையில் 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் பிரிவு 1(3) இன் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக தகவல் அலுவலகர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலகரினால் தகவல் கோரிக்கைக்கான பதிலளிப்பதில் ஏதேனும் பிரஜைக்கு தீங்கிழைக்கப்பட்டால் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையின் முடிவின் பின்னர் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம்.

விசாரணைககககளை நடாத்துவதற்கும் அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை விசாரணைக்காக தேவைப்படுத்தவும் ஆணைக்குழு அதிகாரங்களை கொண்டுள்ளது. சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது அத்தகைய ஆளை பரீட்சிப்பதும் அவசியமானவிடத்து அவ் ஆளின் உடமையில் உள்ள ஏதேனும் தகவலை முன்வைக்கும்படி அவ் ஆளைத் தேவைப்படுத்துவதும் போன்ற அதிகாரங்களும் அதனுள் உள்ளடங்குகின்றது. (5 ஆம் பிரிவின கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல் இரகியமாக பரீட்சிக்கப்படுதல் வேண்டும்) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பகிரங்க அதிகார சபையொன்றினால் மறுக்கப்படும் ஏதேனும் தகவலுக்கு உட்பட்ட பகிரங்க அதிகாரசபையொன்றினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவலலை சோதனை செய்தலும் ஆணைக்குழுவின் அதிகாரமாகும். குறித்தவொரு படிவத்தில் தகவலை வழங்குவதற்கு பகிரங்க அதிகார சபையினை பணித்தலும், 5ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக பொதுமக்களிடமிருந்து அதிகார சபையொன்றினால் நிறுத்திவைக்கப்பட்ட ஏதேனும் தகவலை வெளியிடும்படி பகிரங்க அதிகார சபைக்கு பணித்தலும், எவரேனும் இடருறும் ஆளினால் அதற்கு செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடுகளை கேட்டுத் தீர்மானித்தலும்,

அந்நேரத்தில் கோரப்பட்டு வழங்கப்படாதுள்ள ஏதேனும் தகவல் காரணமாக பிரஜையொருவரிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்களை திருப்பிக்கொடுக்கும்படி பகிரங்க அதிகாரசபைக்கு அல்லது எவரேனும் இயைபான தகவல் அலுவலகருக்கு பணித்தலும் ஆணைக்குழுவிற்கான அதிகாரங்களாக காணப்படுகின்றது.(பிரிவு-15)

அட்டவணை 7 2018 மற்றும் 2019 மேன்முறையீட்டு விசாரணை அமர்வுகள், முடிவுறுத்தப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட ஆணைகள் பற்றி காட்சிப்படுத்தப்படுகின்றது.

| ஆண்டு | செவ்வாய் கிழமைகளின் போதான மேன்முறையீட்டு விசாரணை அமர்வுகள் | திங்கள் கிழமைகளின் போதான மேன்முறையீட்டு விசாரணை அமர்வுகள் | ஒத்திவைக்கப்பட்ட மேன்முறையீடுகள் | இறுதி ஆணைகள் |
|---|---|---|---|---|
| 2018 | 455 | 345 | 251 | 549 |
| 2019 | 619 | 470 | 380 | 709 |

## 3.3 மேன்முறையீட்டின் வகை

**அட்டவணை 8-** நோக்கத்திற்கு அமைய மேன்முறையீடுகள் வகைப்பாடு காட்டப்பட்டுள்ளது.

2018 மற்றும் 2019ம் ஆண்டின் நோக்கத்திற்கு அமைய மேன்முறையீடுகள் வகைப்பாடு

| மேன்முறையீட்டின் வகை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|
| தனிப்பட்ட பிரஜைகளின் கோரிக்கைகளினை அடிப்படையாக கொண்ட மேன்முறையீடுகள் | 537 | 65.2 | 770 | 70.7 |
| தனிப்பட்ட பிரஜைகளின் கோரிக்கைகளினை அடிப்படையாக பொதுவான நோக்கத்தினை கொண்ட மேன்முறையீடுகள் | 269 | 32.7 | 283 | 26.0 |
| சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள்/ பொது நோக்கத்திற்காக சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள் | 17 | 2.1 | 36 | 3.3 |
| மொத்தம் | 823 | 100 | 1089 | 100.0 |

70.0% க்கும் மேற்பட்ட மேன்முறையீடுகள் தனிப்பட்ட கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை, மேலும் 26.0% தனிநபர்களிடமிருந்து தோன்றினாலும் பொதுவான நோக்கத்திற்கு உதவியது. பொது நோக்கிலான மேன்முறையீடுகள் 2019 இல் 3.3% ஆக இருந்தன.

**அட்டவணை 9** ஆனது 2017 மற்றும் 2018ம் ஆண்டுடன் ஒப்பிட்டு 2019ம் ஆண்டு தகவல் பெறப்பட்ட துறைகளின் எண்ணிக்கையினை காட்சிப்படுத்துகின்றது.

அட்டவணை-9 தகவல் பெறப்பட்ட துறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட மேன்முறையீட்டு எண்ணிக்கை

| விடயபரப்புகள் | 2017 எண்ணிக்கை | 2018 எண்ணிக்கை | 2019 எண்ணிக்கை |
|---|---|---|---|
| மனிதவள முகாமைத்துவம்(நியமனம்,பதவியுயர்வு,இடமாற்றம்,ஒழுக்கம்,ஓய்வூதியம்) | 63 | 197 | 213 |
| காணி மற்றும் சொத்து (உரிமைமுறை,மானியமுறை,அனுமதிபத்திரம், கைப்பற்றுதல்,இழப்பீடு) | 44 | 115 | 148 |
| நிர்வாகம் மற்றும் சேவை நடவடிக்கை(அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் சேவை) | 37 | 124 | 203 |
| நிதிமுகாமைத்துவமும் கணக்குகளும்(வரவு,செலவு,வாடகை) | 17 | 47 | 54 |
| பொது அபிவிருத்தி திட்டங்கள்(வீதிகள்,கட்டடங்கள்,நீர்பாசனம்) | 16 | 28 | 86 |
| கல்விச்சேவை (மாணவர்களை சேர்த்தல்,பாடசாலை அபிவிருத்தி,நிர்வாகம்) | 12 | 101 | 134 |
| சுற்றுச்சூழல் தாக்கங்கள்(சூழல் பாதிப்பு,பாதுகாப்பு) | 11 | 16 | 15 |
| விசாரணை குழு அறிக்கைகள்(ஒழுக்கம் தவிர்ந்த) | 11 | 22 | 91 |
| சுகாதார பராமரிப்பு நடவடிக்கை | 6 | 19 | 91 |
| நீதி மற்றும் சமாதானம் | 5 | 82 | 75 |
| கொள்முதல்நடவடிக்கைகள்(விலைக்கு வாங்குதல்,கட்டுமானம்,ஒப்பந்தம்) | 4 | 23 | 0 |
| ஏனைய வெவ்வேறு விண்ணப்பங்கள் | 4 | 26 | 30 |
| மொத்தம் | 230 | 800 | 1086 |

## 3.4 பகிரங்க அதிகார சபைகள் மீது இணங்கியொழுகுதல்

பகிரங்க அதிகாரசபைகள்மீது இச்சட்டத்தால் இடப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதும் உரியவாறு இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதும், ஒரு பொதுத் தன்மையதான அத்துடன் ஏதேனும் ஒரு குறிப்பான பகிரங்க அதிகாரசபைக்குப் பணிக்கப்பட்டதான ஆகிய இருதன்மைய சீர்திருத்தத்துக்கு விதப்புரைகளைச் செய்வதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பகிரங்க அதிகார சபைகளால் வெளிவிடப்படும் தகவலுக்காக அவைகளால் அறவிடப்படவேண்டிய கட்டணங்களை தீர்மானிப்பதற்கு நியாயத்தின் அடிப்படையில் வழிகாட்டி நெறிகளை வழங்குவதும், ஒரு கட்டணக் கொடுப்பனவின்றி தகவல் அலுவலரொருவாரல் தகவல் வழங்கப்படகூடிய சந்தர்பங்களை தீர்மானிப்பதும், தகவல் வழங்குதல் தொடர்பில் உயிர்ப்பான வெளிவிடுகைக் கோட்பாடுமீது அடிப்படையான கட்டண அட்டவணையை தீர்மானிப்பதும், பயனுறு நடைமுறைப்படுத்தல் மீது பகிரங்க அலுவலகருடன் ஒத்துழைப்பதும் அல்லது அவர்களுக்கான பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதும், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளையும் அதன் கீழ் தனியாளின் உரிமைகளையும் பிரசித்தப்படுத்துவதும், பகிரங்க அதிகார சபைகளுக்கென முறையான பதிவேட்டு முகாமைக்கான வழகாட்டிநெறிகளை வழங்குதலும் ஆணைக்குழுவின் கடமையாகும்.(பிரிவு-14)

தீர்ப்பு: தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் 2017 பெப்ரவரி மாதம் 3 ஆம் தேதி செயற்பட தொடங்கியதிலிருந்து தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முறையே 230, 800 மற்றும் 1089 மேன்முறையீடுகளை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட அதே வேளை மொத்தமாக பெறப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை **2119** ஆகும். தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முறையே 208, 549 மற்றும் 709 மேன்முறையீடுகளினை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முடிவுறுத்தியுள்ள அதேவேளை முடிவுறுத்திய மொத்த எண்ணிக்கை **1466** ஆகும். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள மேன்முறையீட்டு எண்ணிக்கை **653** ஆகும். முடிவடைந்த வழக்குகளில், நான்கு (04) தரப்பினர் மட்டுமே தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணைகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட்டனர். முடிவுறுத்தப்பட்ட மேன்முறையீடுகளின் சதவீதம் 69.2% ஆகும், இது ஒரு மேன்முறையீட்டு அமைப்பின் செயல்பாட்டைப் பொறுத்தவரை உயர்ந்ததாகக் கருதப்படகூடியதாகும்.

அமுலாக்கம்: 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இணங்காமை தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை **112** ஆகவும், தீர்க்கப்பட்ட வழக்குகள் **46** ஆகவும் காணப்பட்டது. முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையின் சதவீதமாக, 7.6% (இணங்காதது) மற்றும் 3.1% (அமல்படுத்தப்படாத இணங்காத வழக்குகள்). ஆகவும் காணப்பட்டது. பகிரங்க அதிகார சபைகளினால் ஆணைகளினை பின்பற்றாதது தொடர்பாக தெளிவான சட்ட நடைமுறையுடன் அமலாக்க கூடிய பொறிமுறையை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆணைக்குழு தனது சட்ட வல்லுநர்கள் மூலம் நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வது தொடர்பிலான நடவடிமுறையினை தெரிந்து கொண்டுள்ளது.

பகிரங்க அதிகார சபைகளினால் இணங்கியொழுகாமை

அட்டவணை 10 ஆணைக்குழுவின் ஆணைகளுக்கு பகிரங்க அதிகார சபைகள் இணங்கியொழுகாமை தொடர்பான முறைப்பாடுகளினை காட்டுகின்றது.

| ஆண்டு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | வாதிடுவதற்கு பொருத்தமானது | வாதிடுவதற்கு பொருத்தமற்றது | தகவல் வழங்கப்பட்டது | நிலுவையிலுள்ளவை |
|---|---|---|---|---|---|
| 2017 | 06 | 2 | 4 | 2 | - |
| 2018 | 49 | 9 | 31 | 5 | 4 |
| 2019 | 57 | 6 | 2 | 2 | 4 |

பதிவேடுகள் முகாமைத்துவம் : வழிகாட்டுதல்கள் மூலம் தகவல் நிர்வாகத்திற்கான துல்லியமான வழிமுறைகளை வழங்குதல்

பல பகிரங்க அதிகாரிகள் தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தை (பிரிவு 7) அமுல்படுத்துவதன் மூலம் பதிவேடுகளினை நிர்வகிப்பதில் சிரமங்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். பதிவேடு நிர்வாகத்தின் சிக்கல்களை எவ்வாறு தீர்க்க முடியும் என்பது குறித்து பங்குதாரர்களுடன் பல சுற்று விவாதங்கள் நடத்தப்பட்டன. வழிகாட்டுதல்களை உருவாக்க சட்ட ஆலோசகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த பகுதி அவசர கவனம் செலுத்த நிலுவையில் உள்ளது.

அறிக்கையிடல் தொடர்பாக இணங்கியொழுகுதல்

2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 9 என்பன எல்லா அமைச்சர்கள் மற்றும் மாகாண சபைகளின் அமைச்சர்களை நெறிப்படுத்துகின்றது. 1) குறித்துரைக்கப்பட்ட அமைச்சுகளினது ஒழுங்கமைப்பு, பணிகள், தொழிற்பாடுகள், கடமைகள் என்பவற்றிறின் மேம்படுத்ததப்பட்ட தகவலுடன் இரு தடவை ஆண்டுதோறும் அறிக்கையினை பிரசுரித்தல். 2) அமைச்சின் வலைத்தளத்தின் ஊடாக பிரிவு 3ன் கிழ் பிரஜைகளின் தகவலை அணுகுதலுக்கான உரிமையினை செயற்படுத்த செயற்திட்டத்துடன் தொடர்பான தகவலினை அறிவித்தல்

அமைச்சினால் ஆண்டுதோறும் அறிக்கையினை வெளியிடுதல்

சட்டத்தின் பிரிவு 8(1)ன் கீழ் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொர் ஆண்டும் முறையே யூன் முப்பதாம் திகதிக்கும் டிசெம்பர் முப்பத்தோராம் திகதிக்கும் முன்னராக ஆண்டுக்கு இரு தடவை பிரிவு 8(2)ல் குறிப்பாக உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களினை கொண்ட அறிக்கையினை வெளியிடுதல் வேண்டும். சட்டத்தின் பிரிவு 8(3)ன் கீழ் அச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஆறு மாதங்களுள் அமைச்சர்கள் அறிக்கையினை வெளியிடுவது கட்டாயமானதாகும். பிரிவு 8(4) ஆனது அறிக்கைகள் அரச கரும மொழிகளில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிக்கைகள் பொதுமக்களின் பரிசோதனைக்கு கிடைக்க செய்வித்தல் வேண்டும்.

<u>அறிக்கையினை வெளியிடுதல் அல்லது செயற்திட்டம் தொடர்பான தகவலினை அமைச்சர்களினால் வழங்கல்</u>

பிரிவு 9(1) ன் கீழ் பிரிவு 9(3) ல் குறித்துரைக்கப்பட்டது போன்ற குறித்த ஒவ்வொரு அமைச்சரும் செயற்திட்டம் தொடர்பான எல்லாத் தகவல்களையும் அறிவிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்தகைய தகவலானது செயற்திட்டத்தை தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னராக, அத்தகைய செயற்திட்டம் சம்மந்தமாக பொதுவில் பொது மக்களுக்கு அத்துடன் அத்தகைய செயற்திட்டத்தால் பாதிக்கப்படும் சாத்தியம் கொண்ட எவரேனும் குறிப்பான ஆட்களுக்கும் தகவலினை வெளிப்படுத்த வேண்டும். சட்டத்தின் பிரிவு அடிப்படையில் செயற்றிட்டத்தின் பிரஜையின் கோரிக்கை பற்றி அச்செயற்திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துகைக் காலப்பகுதி முழுவதுமான தகவலினை வழங்குவது கட்டாயமானது ஆகும். பிரிவு 9(3) ஆனது வெளிநாட்டு நிதியளிப்பு செய்திட்டம் மற்றும் உள்ளூர் நிதியளிப்பு செயற்திட்டம் என்பவற்றிற்கான பொருத்தமான பெறுமதி தொடர்பில் வெளிப்படுத்துகின்றது.

ஆணைக்குழுவின் அவதானத்திற்கு அமைய பிரிவு 8 ன் கீழ் அமைச்சுகளின் அமைச்சர்களினால் தாங்களாகவே முன்வந்து தகவலை வெளிக்கொணரும் நடைமுறைப்பிரயோகம் (Proactive disclosure) இன் நடைமுறை பிரயோகம் மிக குறைவு என்பதும் பிரிவு 9 இன் கீழ் அமைச்சுகளின் அமைச்சர்களினால் Proactive disclosure இன் நடைமுறை பிரயோகம் முற்றாக ஒன்றும் இல்லை என்பது அறியப்பட்டது. இதற்கமைய அனைத்து செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலாளர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை கடிதத்தை அவர்களின் கவனத்தினை ஈர்க்கும் தேவைக்கு அனுப்பியது UNDP உதவியுடன் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு கருத்தரங்கிலும் இந்த விவகாரம் விவாதிக்கப்பட்டுத

## 3.5 பகிரங்க அதிகார சபைகளினால் அறிக்கையிடல்

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 10 ஆனது "பகிரங்க அதிகாரசபை ஒவ்வொன்றும் பின்வரும் தகவலைக் கொடுத்து உதவுகின்ற ஆணைக்குழுவுக்கான ஆண்டறிக்கைகளை, அறிக்கையானது எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிககை அதனது அலுவலகத்திலும் அதன் அலுவலகமுறையான இணையத்தளத்திலும் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச்செயயப்படுதல் வேண்டும்" என எடுத்தியம்புகின்றது.

இந்த அறிக்கையை சமர்ப்பிப்பது சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் கட்டாயமானது ஆகும். இந்தச் சட்டத் தேவையை மிகச் சில பொது அதிகாரிகள் மட்டுமே கடைப்பிடித்து, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த 2017 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, டிசம்பர் 31, 2018 க்குள் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு அறிக்கைகளை சமர்ப்பித்திருப்பதைக் காணலாம்.

ஆணைக்குழு 2017 ஆம் ஆண்டிற்கான 111 (7.0%) ஆண்டு அறிக்கைகளையும், 2018 ஆம் ஆண்டிற்கான 219 (13.9%) வருடாந்திர அறிக்கைகளையும் பெற்றுள்ளது. இந்த 2019 ஆண்டு அறிக்கைகளில், 163 (74.4%) முழுமையற்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது, அட்டவணை 11 ஐக் காண்க. இதில் உள்ள பொது அதிகாரிகளின் எண்ணிக்கை அரச துறை 1579 என மதிப்பிடப்பட்டுள்ளது, அதாவது மாகாண சபைகள் 718 இன் கீழ் மற்றும் மத்திய அரசு 861 கீழ் ஆகும்.

அட்டவணை 11 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் பகிரங்க அதிகார சபைகளினால் அனுப்பப்பட்ட ஆண்டறிக்கைகளின் (பிரிவு -10) எண்ணிக்கையை காட்டுகின்றது.

| மாகாணங்கள் | 2017 | 2018 |
|---|---|---|
| மேல் மாகாணம் | 45 | 65 |
| தென் மாகாணம் | 7 | 8 |
| வட மாகாணம் | 2 | 4 |
| மத்திய மாகாணம் | 24 | 23 |
| சபரகமுவ மாகாணம் | 10 | 17 |
| வடமத்திய மாகாணம் | 8 | 16 |
| கிழக்கு மாகாணம் | 3 | 4 |
| ஊவா மாகாணம் | 6 | 33 |
| வடமேல் மாகாணம் | 6 | 3 |
| | 111 | 173 |

UNDP வழங்கிய கண்காணிப்பு அதிகாரிகளின் உதவியுடன், ஆணைக்குழு செப்டம்பர் 20, 2019 அன்று கொழும்பில் அனைத்து அமைச்சக செயலாளர்கள் மற்றும் தலைமை செயலாளர்களுக்கான பட்டறை ஒன்றை நடத்தியது. கொழும்பில் மாவட்ட செயலாளர்கள் இது தொடர்பாக அமைச்சக செயலாளர்கள், தலைமைச் செயலாளர்களுக்கு சுற்றறிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டன. செய்தித்தாள் அறிவிப்புகள் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டன. தற்போது கண்காணிப்பு அதிகாரிகள் தங்கள் வருடாந்த அறிக்கைகளை ஆணைக்குழுவிற்கு அனுப்புவதை அதிகரிக்க பகிரங்க அதிகார சபையினை தொடர்பு கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## 3.6 பொதுமக்களுக்கான விழிப்புணர்வு

ஆணைக்குழுவின் மும்மொழியிலும் காணப்படும் வலைத்தளம் பொது மக்களுக்கு விழிப்புணர்வை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. ஆணைக்குழுவின் வலைத்தலமானது rticommission.lk என்ற வகையில் காணப்படுகின்றது. ஆணைக்குழுவின் அனைத்து ஆணைகள், அதன் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், கொள்கை ஆவணங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் உட்பட ஒரு குறிப்பிடத்தக்க தகவல் இணையதளத்தில் கிடைக்கிறது. சுவிட்சர்லாந்து தூதரகம் வழங்கிய நிதி உதவியைப்

பயன்படுத்தி, தொலைதூர மாவட்டங்களான பனாமா (அம்பாரை), அம்பகமுவா (நுவரெலியா), கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கருவலஸ்வேவா (புத்தளம்) ,சூரியவேவா (ஹம்பாந்தோட்டா) மற்றும் மஹியங்கனை (பதுளை) முதலிய 7 மகாணங்களில் ஆலோசனை மற்றும் மேன்முறையீட்டு அமர்வுகளினை சிவில் சமூக தலைவர்கள், CBO மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் திட்டத்தின் பாகமான ஆணைக்குழு நடத்தியது. மாகாண மட்ட கலந்துரையாடல்களின் போது தொலை தூர மாவட்டங்களில் மற்றும் பிரிவுகளில் மக்களின் விழிப்புணர்வு குறைவானதாக காணப்படுகின்றது என்பதும் ஆணைக்குழுவின் பிரதான நோக்கத்தினை அடைய அது அதிகரிக்கப்பட வேண்டும் என்பதும் வெளிப்பட்டது.

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆணைகளில் தெரிவு செய்யப்பட்ட சில ஆணைகள் மற்றயது தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பற்றிய விளக்க உரைகளும் சட்டத்தை பயன்படுத்தும் முறைகளும் குறித்த இரண்டு வெளியீடுகள் சிறந்த சட்ட அறிஞர்கள், பதிப்பாசிரியர், அரசு ஊழியர்கள் மற்றும் கொள்கை வல்லுநர்களின் பங்களிப்புகளுடன், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆறு வெளீயீடுகளாக தகவல் அறியும் ஆணையாளர் கிஷாலி பின்ரோ ஜயவர்தன ஆகியோரால் பதிப்பிக்கபட்டு சுவிட்சர்லாந்து தூதரகத்தின் உதவியினால் பிரசுரிக்கப்பட்டது.

இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுக்கும் ஆணைக்குழுவின் முக்கிய முடிவுகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து அவ்வப்போது பொதுமக்களுக்கு தெரிவிக்கும் தகவல்தொடர்புகள் மற்றும் அறிக்கைகள் மூலம் ஊடகங்களுடனான தொடர்புகள் நடந்தன.

சர்வதேச அளவில், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் கிஷாலி பிண்டோ ஜயவர்தன பின்வரும் சர்வதேச நிகழ்வுகளில் பேச்சாளராக ஆணைக்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தயிருந்தார். ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 2030 நிகழ்ச்சி நிரலுக்கான தகவல் மற்றும் சவால்கள் குறித்த உலகளாவிய நிகழ்வு, இத்தாலியின் ரோமில் மே மாதம் 28, 2019 யுனெஸ்கோவில் இடம்பெற்ற நிகழ்வு மற்றும் நியூயார்க்கில், ஜூன் மாதம் 14, 2019 அன்று. இடம் பெற்ற நிகழ்வு என்பனவே அவையாகும். ஸ்காட்லாந்தின் தகவல் சுதந்திர ஆணையாளருடன், ஆணையாளர் பிண்டே ஜயவர்தனவும் இணைந்து பிலிப்பைன்ஸ் குடியரசால் டிசம்பர் 14, 2019 அன்று கொண்டாடப்பட்ட நிறைவேற்று தகவல் சுதந்திரம் (FOI) திட்டத்தை அமுல்படுத்திய மூன்றாம் ஆண்டு விழாவில் பேசினார்.

# 4. நிர்வாகம் மற்றும் நிதி செயல்திறன்

## 4.1 நன்கொடை நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவு

### UNDP செயல் திட்டங்கள்

மேன்முறையீடுகளை பகுப்பாய்வு செய்வதற்கும், RTIC அதன் தீர்மானங்களைச் செய்வதற்கு வசதியாக சட்டக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும் UNDP ஆரம்பத்தில் இருந்தே தேவையான சட்ட நிபுணத்துவத்தை வழங்கியது. சட்டக்குறிப்பினை மற்றும் விரிவான சட்ட ஆராய்ச்சி மற்றும் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து இறுதி ஆணைகளினை தயாரிக்கவும் சிரேஷ்ட சட்ட ஆய்வாளர் மற்றும் கனிஷ்ட சட்ட ஆய்வாளர் UNDP உதவியின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

UNDP ஒரு **கண்காணிப்பு அதிகாரி** மற்றும் **உதவி கண்காணிப்பு அதிகாரியை** ஒரு கட்டமைப்பின் மேம்பாடு மற்றும் செயல்படுத்தலுக்கான ஒரு கால அவகாசத்துடன் நியமித்தது, சட்டத்தின் 10 வது பிரிவின் படி, பகிரங்க அதிகார சபைகள் வருடாந்திர அறிக்கைகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதை கண்காணிக்க செய்யப்பட்டது. அவர்களின் பணிக்காலம் 2019 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை ஆகும்.

### இந்த திட்டத்திற்கு சுவிட்சர்லாந்து தூதரகம் உதவியது

மோதல்களால் பாதிக்கப்பட்ட மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் தகவல் உரிமை மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் ஆகிய திட்டத்திற்கு 10,124 மில்லியன் பெறுமதியான பணத்தினை நிதி உதவியாக சுவிஸ் தூதரகம் வழங்கியுள்ளது. சுவிஸ் தூதரகம் 2018 மே 1 முதல் 2019 ஆகஸ்ட் 30 வரையிலான காலகட்டத்தில் இரண்டு வெளியீடுகளினை வெளியிடுவதற்கு குறிப்பாக ‘‘தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆணைகளில் தெரிவு செய்யப்பட்ட சில ஆணைகள்’’ மற்றயது ‘‘தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பற்றிய விளக்க உரைகளும் சட்டத்தை பயன்படுத்தும் முறைகளும்’’ உதவியுள்ளது. இத்தகைய வெளியீடுகளினை ஆணையாளர் கிஷாலி பிண்டோ ஜயவர்தன பதிப்பித்தார். ஏழு மாகாண ரீதியிலாக ஆலோசனை கலந்துரையாடல்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 மாவட்டங்களில் விளிம்புநிலை சமூகங்கள் மற்றும் தகவல் அதிகாரிகளுக்கான மேன்முறையீட்டு அமர்வுகள் ஒப்புக் கொண்டபடி இத் திட்டத்தின் கீழ் நடைபெற்றது. பனாமா (அம்பாரை), அம்பகமுவா (நுவரெலியா), கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கருவலஸ்வேவா (புத்தளம்) ,சூரியவேவா (ஹம்பாந்தோட்டா) மற்றும் மஹியங்கனை (பதுளை) – 40 பங்குபற்றாளர்கள் ஒரு பயிற்சியில் பங்குபற்றியிருந்தனர்.

### ஜனநாயக ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல் திட்டத்தை வலுப்படுத்துதல் (SDGAP- USAID)

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீடுகள் தொடர்பான பூர்வாங்கப் பணிகளில்

ஆணைக்குழுவிற்கு உதவ சட்ட ஆய்வாளர்களை ஆதரிப்பதைத் தவிர, மேலும் அதிகரித்து வரும் மேன்முறையீடுகளின் பார்வையில், மேன்முறையீட்டு விசாரணை செயல்முறையை விரைவுபடுத்துவதற்கும், குடிமக்களுக்கு மேன்முறையீடுகளின் தகவல்களை மீண்டும் வழங்குவதற்கும், SDGAP ஒரு இணைய அடிப்படையிலான மின்னணு கண்காணிப்பு முறையை நிறுவுவதில் ஈடுபட்டுள்ளது, இது மேன்முறையீடுகளை ஒழுங்காகவும் விரைவாகவும் செயலாக்குவதற்கான மேன்முறையீடுகளை வைத்திருக்க மிகவும் அவசியமாகிவிட்டது. ஹாட்லைன் மற்றும் இணைய அடிப்படையிலான கண்காணிப்பு முறையை எளிதாக்கும் ஒரு திட்டத்தை செயல்படுத்த SDGAP செயற்திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

**ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்**

அட்டவணை 12 அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கையினை காட்டுகின்றது.

| **பதவி** | **அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **தற்போது காணப்படுவோர்** |
|---|---|---|
| பணிப்பாளர் | 01 | 01 |
| சிறப்பு ஆய்வு அலுவலர் | 01 | 01 |
| ஆய்வு அலுவலர் | 01 | 01 |
| நிர்வாக அதிகாரி | 01 | 01 |
| நிதி அதிகாரி | 01 | 01 |
| மொழிபெயர்ப்பாளர்(தமிழ்) | 01 | - |
| தகவல் தொழிநுட்ப உதவியாளர் | 01 | 01 |
| அபிவிருத்தி அதிகாரி | 04 | 04 |
| முகாமைத்துவ உதவியாளர் | 04 | 04 |
| பிரத்தியேக உதவியாளர் | 01 | |
| ஓட்டுனர் | 03 | 02 |
| அலுவலக உதவியாளர் | 02 | 01 |
| மொத்தம் | 21 | 17 |

# 4.3 வரவு செலவும் நிதி கட்டுப்பாடும்

**தகவலரியும் உரிமைக்கான ஆணைக்குழு**

செலவு தொடர்பான அறிக்கை - 2019

| **விடயம்** | **வரவு செலவு** | **மொத்த செலவுகள்** | **% செலவு வீதம்** |
|---|---|---|---|
| | | | |
| தொடர்சியான செலவுகள் | 40,000,000.00 | 32,869,650.83 | 82.17 |
| மூலதன செலவு | 4,500,000.00 | 4,133,215.38 | 91.85 |
| | | | |
| சுவிஸ் செயற்திட்டம் | 4,560,000.00 | 4,560,000.00 | 100.00 |